## ஆலந்தூரில் இருந்து கோயம்பேடு வரை

# மெட்ரோ ரெயிலில் இசை கச்சேரி

சென்னை, அக்.18–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னையில் இயக்கப்படும் மெட்ரோ ரெயில் சேவையில் அவ்வப்போது புதுமையான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் ஆலந்தூரில் இருந்து கோயம்பேடு வரை 10 கிலோ மீட்டர் தூரம் கொண்ட மெட்ரோ ரெயில் பயணத்தின் போது கலை திருவிழா குழுவினரின் 'அனைவருக்கும் இசை' என்ற தலைப்பில் கர்நாடக இசை கச்சேரி நடத்தப்பட்டது.

இதில் மாளவிகா சுந்தர், பிரவின் சைவி, ராம்குமார் கனகராஜன், மனோஜ் குமார், டி.எம்.கிருஷ்ணா ஆகியோர் இசை கருவிகளை இசைத்தபடி கச்சேரி நடத்தினர். தொடர்ந்து கோயம்பேடு ரெயில் நிலையத்தில் என்.பூபதி, சித்தூர் ஆர்.தேவராஜுலு, என்.பாலாஜி மற்றும் எம்.ஜி.ஹரிசங்கர் ஆகியோர் கலந்து கொண்ட நாதஸ்வர கச்சேரியும் நடந்தது. ரெயிலில் பயணம் செய்த பயணிகள் இசை கச்சேரியை ரசித்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.